
VAALIPAN MINISTRIES SRI LANKA

# வாலிபன்

# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 112 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | மார்கழி - 2017




## அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?

- சகரியா 4:10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,**

இரட்சகரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வாலிபனின் 112வது இதழினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்".(2கொரிந்தியர் 2:14)

வாலிபன் ஊழியங்களானது தனது ஓட்டத்தில் 10 ஆண்டுகளை நிறைவு செய்து புதியதொரு ஆண்டுக்குள் பிரவேசிக்க கிருபையளித்த ஜீவனுள்ள கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன். கடந்து வந்த ஊழியப்பாதையில் எம்மோடு கரம்கோர்த்து பல்வேறு விதங்களில் தாங்கிவந்த ஒவ்வொருவரையும் நன்றியுள்ள உள்ளத்தோடு நினைவு கூர்கிறோம். இவ்வூழியத்தில் கர்த்தருடைய கிருபையை நினைத்து நன்றி செலுத்தும் ஆராதனை எதிர்வரும் டிசம்பர் மாதம் பத்தாம் திகதி காலை 7.30 மணிக்கு கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. கடந்த வாரத்தில் வாலிபன் ஊழியங்களால் நடாத்தப்பட்ட இரத்ததான முகாமில் எம்முடன் இணைந்து கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

வருடத்தின் இறுதிப் பகுதிகுள் நுழைந்துவிட்டோம். இன்னும் சிறிது நாட்களில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட இருக்கிறோம். இவ்வருடம் எமது கொண்டாட்டங்கள் சற்று வித்தியாசமாக இருக்கலாமே? எமது பகுதியில் பசியோடும், பிணியோடும், தேவைகளோடும், சிதைக்கப்பட்டவர்களாய், ஒடுக்கப்பட்டவர்களாய் இருப்பவர்களைத் தேடுவோமா? இவ்வருட கிறிஸ்மஸை அர்த்தமுள்ளதாய் மாற்றுவோம்.

தொடர்ந்தும் வாலிபன் ஊழியங்களை பல்வேறு விதங்களில் தாங்குகின்ற அனைவரையும் ஜெபத்துடனும், நன்றியுடனும் நினைவுகூருகின்றேன். அத்துடன் எதிர்வரும் சில மாதங்களில் கையெழுத்து வேதாகம பிரதியை வெளியிட வாஞ்சிக்கிறோம். இவ்வசனத்தின் பணியில் தங்களை இணைத்துக் கொள்ள விரும்புவோர் தயவாக இவ்விதழில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்ந்தும் சிறுவர்களுக்கான சித்திரப் போட்டியிலும், குறுக்கெழுத்துப் போட்டியிலும் பங்குபெற தங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வூழியம் வளரவும், அநேக இதயங்களை ஆறுதல் படுத்தவும் தயவாக எம்மை உங்கள் தனிப்பட்ட, குடும்ப ஜெபங்களில் தாங்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் வாலிபன் குடும்பத்தினரின் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Message from*
# REV. ASIRI P. PERERA
President Bishop MCSL

It is with great pleasure that I extend the good wishes to the Vaalipan Magazine which is celebrating another important mile stone in its Ministry and work among the youth in our Church. The Methodist Church has definitely recognized the importance of the Youth Ministry and its activities.

Vaalipan encourages the Youth of our time to seriously take their journey of faith forward and I am glad that the celebration of its anniversary is a definite sign of the same.

May all the Youth in our Church be greatly encouraged and energized through their involvement in Valippan.

May God be with you all.

*Rev. Asiri P. Perera*
**PRESIDENT / BISHOP**
METHODIST CHURCH SRI LANKA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

'வாலிபன்' திருப்பணி வாழ்வில் 10 ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு பெரு உவகை அடைவதோடு எல்லாவற்றிற்கும் ஊற்றான இயேசுக் கிறிஸ்துவை ஸ்தோதரிக்கின்றேன், இப் பணியை வாழ்த்துகின்றேன்.

வாலிபன் தனக்கென ஒரு தரிசனத்தை உருவாக்கி அதனை உண்மையோடும், நேர்த்தியாகவும் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பணியினை பல மட்டங்களில் செய்கின்ற நற்செய்திப்பணி, சமுதாயப்பணி, சிறுவர்பணி, சஞ்சிகை வெளியீடு என்று பலதரப்பட்ட பணியில் ஈடுபட்டு தேவையுள்ள சபைகளில் இறைபணி ஆற்றியிருப்பது குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும்.

எங்கெல்லாம் உதவிகளும் ஒத்தாசைகளும் தேவைப்படுகிற போது அவ்வாறான பணிக்களங்களை தெரிவுசெய்து, போர்க்கால மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளிலும் அங்குள்ள இறைமக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் தம்மால் எதனைச் செய்ய முடியுமோ அதனை வாலிபர்களாக பணத்தைச் சேகரித்து அப்பணிகளை ஆற்றியிருப்பது வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குரியதுமொன்றாகும். குறிப்பாக இயேசுவின் இறைநாமம் எல்லாப் பணிகளுக்கூடாக அறிவிக்கப்படவேண்டுமெனவும், வாலிபர் கள் இறைவிருப்பத்திற்கேற்ப பரிசுத்த வாழ்வு வாழவேண்டுமென்பதில் அக்கறைகொண்டு செயற்பட்டு வருவதை பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இப்பாரிய பணி மேலும் வளர வாழ்த்துவதோடு, இயேசுவின் நாமம் உயர்வதாக!

**அருட்திரு S.S. டெரன்ஸ்**

வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை தலைவர்

# 1-10

**1. ஒன்றை செய்யுங்கள்**

பின்னானவைகளை மறந்து, முன்னானவைகள் நாடு (பிலிப்பியர் 3:13 -20)

**2. இரண்டையும் விட்டுவிடாதிருங்கள்**

கிருபை, சத்தியம் (நீதிமொழிகள் 3:2-3)

**3. மூன்றில் நிலைத்திருங்கள்:**

விசுவாசம், நம்பிக்கை, அன்பு (1கொரிந்தியர் 13 :13)

**4. நான்கையும் தரித்துக் கொள்ளுங்கள்:**

இயேசு கிறிஸ்து, ஒளியின் ஆயுதங்கள், புதிய மனுஷன், நீடிய பொறுமை (ரோமர் 13: 14 / எபேசியர் 4 : 24 /கொலோசெயர் 3:12 )

**5. ஐந்தையும் அழித்துப் போடுங்கள்**

விபச்சாரம், அசுத்தம், மோகம், துச்சை, பொருளாசை (கொலோசெயர் 3:5,6)

**6. ஆறையும் எடுத்துக்கொள்ளுங்கள்**

சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசமென்னும் கேடகம், இரட்சணியமென்னும் தலைச்சீரா, தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம். (எபேசியர் 6:13-18)

**7. ஏழையும் வெறுத்து விடுங்கள்:**

மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம் பேசும் பொய்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் (நீதிமொழிகள் 6 :16-19 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. எட்டையும் விட்டுவிடாதீர்கள்:**

விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு (2 பேதுரு 1:5 - 9)

**9. ஒன்பதையும் அனுபவமாக்குங்கள்**

a. ஆவியின் கனிகள் : அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5 : 22 - 23)

b. ஆவியின் வரங்கள் : ஞானத்தை போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளப்பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம். (1 கொரிந்தியர் 12 : 8 - 10)

**10. பத்தையும் பற்றிக் கொள்ளுங்கள் :**

கர்த்தருடைய கற்பனைகள். (யாத்திராகமம் 20 :3-17)

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக**

## விளையாட்டு செய்திகள்

- பரலோக அணி மற்றும் சாத்தான் அணிக்கிடையே கல்வாரியில் நடந்த ஒரு யுகக் கிரிக்கெட் போட்டியில் இயேசுகிறிஸ்து ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.
- துவக்க ஆட்டக்காரரான ஆதாம் கீழ்ப்படியாமையினால் ரன் எதுவும் எடுக்காமல் அவுட் ஆனார்.
- ஆபிரகாம் விசுவாசமாக விளையாடி 25 ரன்கள் எடுத்தார்.
- ஈசாக்கு பயபக்தியாக விளையாடி ரன்களைக் குவித்தார்.
- யாக்கோபு தந்திரமாய் விளையாடி 20 ரன்கள் எடுத்தார்.
- மோசே சாந்தமாய் விளையாடி 35 ரன்கள் எடுத்தார்.
- மிக சிறப்பாக விளையாட ஆரம்பித்த சிம்சோன், தெலீலாள் வீசிய பந்தில் போல்டு ஆனார்.
- அடுத்து களமிறங்கிய தாவீது தலைவனின் இருதயத்துக்கு ஏற்றப்படி உண்மையாக விளை யாடி 65 ரன்கள் குவித்தார். அவர் அடித்த பந்தை பத்சேபாள் பிடித்ததால் அவுட் ஆனார்.
- எலியா வைராக்கியமாய் விளையாடி 25 ரன்கள் எடுத்தபோதிலும், யேசபேல் வீசிய மூர்க்கமான பந்தினால் சூரைச் செடியின், அருகில் சுருண்டு விழுந்தார்.
- தானியேல் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் விளையாடி அரை சதம் அடித்தார்.
- பரலோக அணி தோல்வியை தழுவி விடுமோ என்ற நிலையில் களத்திலறங்கிய இயேசு அதிக ரன்களைக் குவித்தார். 100 ரன் வித்தியாசத்தில் பரலோக அணி அமோக வெற்றி. பரலோக அணியை சேர்ந்தவர்கள் சிலுவைக் கொடியை அசைத்து ஆரவாரம் செய்தனர்.

From



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மனம் திரும்பு

ஒவ்வொரு ஞாயிறு காலை 6 மணிக்கெல்லாம், வெளுத்து போன ஜீன்ஸ் பேன்ட்டும் பழைய டீ ஷர்டும் சாதாரன செருப்பும் போட்டு, ஒரு பெண், ஆலயத்தில் உள்ள எல்லா நாற்காலிகளையும் துடைத்து, மேடையில் உள்ள பூக்களை எல்லாம் சரி செய்துக்கொண்டிருந்தார். இவர் கடந்த 6 வருடங்களாக ஒரு வாரம் கூட தவறாமல் இதை செய்துக்கொண்டிருக்கின்றார்.

ஒரு நாள் அந்த ஆலயத்திற்கு தன்னுடைய பென்ஸ் காரில், சிறந்த உடை அணிந்து வாலிபர் ஒருவர் சற்று சீக்கிரமாகவே வந்திருந்தார்.

ஒரு நாற்காலியில் அமர்ந்து இந்த பெண் ஆலயத்தில் செய்யும் வேலையை உற்று நோக்கிக்கொண்டிருந்தார்.

பார்ப்பதற்கு நன்றாக இருக்கும் இந்தப்பெண் பழைய ஆடை அணிந்து, தலைக்கு முக்காடிட்டு, எத்தனை அருமையாக, உண்மையாய் கர்த்தருக்காக செய்கிறார் என்று வியந்தவராய். பாவம் இவர் ஒரு வேளை பள்ளி படிப்பை கூட தொடர முடியாமல் கூலி வேலை செய்து கஷ்டப்படுகிறவராக இருக்கலாம் என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்.

ஒருவேளை இவரை பார்க்கவும், இவருக்கு உதவி செய்யவே என்னை இத்தனை சீக்கிரம் கர்த்தர் இங்கு அழைத்து வந்தாரோ என்று யோசித்தவராக தன்னுடைய பென்ஸ் காரை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

காருக்குச் சென்று இரண்டு 500ரூபா நோட்டுக்களை எடுத்துக்கொண்டு ஆலயம் நோக்கி நடக்க ஆரம்பித்தார், அந்த பெண்ணும் தன்னுடைய வேலையை முழுமையாக முடித்து வீட்டிற்கு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்...

இவர் நேரே அந்த பெண்ணிடம் சென்று அவர் செய்யும் இந்த வேலையை வெகுவாக பாராட்டிவிட்டு, அவருக்கு தான் கொண்டு வந்த 1000ரூபா கொடுக்க முயன்றார். அவரும் மிகவும் மரியாதையோடு அதை வாங்க மறுத்தார், பின்னர் இவர் அதை அந்த பெண்ணின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் திணிக்க முயன்றார். ஆனாலும் அதை வாங்க மறுத்து நடக்க ஆரம்பித்தார்.

இவரோ அவரை விடுவதாக இல்லை, தொடர்ந்து . கர்த்தர் உங்களுக்கு உதவி செய்யவே என்னை இத்தனை சீக்கிரம் அனுப்பியதாக உணர்ந்தேன், தயவு செய்து இதை பெற்றுக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்தினான், மீண்டும் அவர் வேண்டாம் என்று சொல்ல. சரி வாருங்கள் உங்களை என்னுடைய காரில் உங்கள் வீட்டிற்க்கு அழைத்துச் செல்கிறேன், நீங்கள் நேரத்தோடு ஆலயத்திற்கு வந்து விடலாம் என்றபோது. மிக்க நன்றி, நான் என்னுடைய காரில் செல்கிறேன் என்று கூறி தன்னுடைய காரை நோக்கிச் சென்றார்.

அந்த பெண் ஒரு புதிய டீஆறு காரில் வந்திருந்தார். அதை பார்த்த உடன் தன்னுடைய பென்ஸ் கார் ஒன்றுமில்லை என்று உணர்ந்தவராய் வாயடைத்து நின்றார். காரில் ஏறிய அந்த பெண் தன்னுடைய கார்டை இவரிடம் கொடுத்தார். திகைத்து நின்ற இவர் அந்த கார்டை கண்டவுடன் அதிர்ந்து போனார், அந்த நகரத்தின் முக்கியப் புள்ளிகளில் இவரும் ஒருவர்.

ஆம் அந்த பெண்மனி காரில் அமர்ந்த படி இவரை பார்த்து. "கர்த்தர் என்னுடைய நிலையை மாற்ற உங்களை அனுப்பவில்லை, ஒருவேளை நீங்கள் தாழ்மையை கற்றுக்கொள்ள உங்களை அனுப்பி இருப்பார்." என்று சொல்லிவிட்டு தன் காரில் சென்று விட்டார்.

ஆம், கர்த்தர் அந்த சகோதரனை சீக்கிரம் அழைத்து வந்தது, அவர் உணர்வடைவதற்காகவே. அவரும் உணர்ந்தவராய் தன் தவறுக்காக வருந்தினார்.

அடுத்த வாரத்தில் இருந்து அந்த சகோதரியோடு சேர்ந்து ஒவ்வொரு வாரமும் அதிகாலையில் வந்து ஆலயத்தை சுத்தம் செய்து வருகின்றார்.

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே. நாமும் இந்த சகோதரனை போல, கர்த்தர் என்னைக்கொண்டு அடுத்தவர்களுக்கு உதவி செய்வார், என்னைக்கொண்டு போதிப்பார், என்னைக் கொண்டு பெரிய காரியங்கள் செய்வார். நான் வளர்ந்தவன் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றோமா?

நம்மை ஆராய்ந்து பார்போம்.

ஒவ்வொரு நாளும் ஐயா! இன்று என்னை எப்படி நடத்த சித்தமாய் இருக்கின்றீர், என்னை முற்றிலுமாய் ஒப்புக் கொடுக்கின்றேன் என்னை நடத்தும் என்று கெஞ்சுவோமா?

ஆமென்

**சகோதரி.ஜெபப்பிரியா**



உங்களது ஜெபத் தேவைகளுக்காக உங்களோடு சேர்ந்து
ஜெபிக்க ஆயத்தமாயுள்ளோம் உங்கள் விண்ணப்பங்களை
**SMS** வாயிலாக அனுப்பி வையுங்கள்
077-9584930 / 071-3456766





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 108 இற்கான விடைகள்

### மேலிருந்து கீழ்

01. ஜீவவிருட்சம்
05. உப்லர (உலரப்)
06. றுஎம்பு (எறும்பு)
07. தைலம்
10. கண்மணியைப் போல்

### இடமிருந்து வலம்

01. ஜீவ ஊற்று
02. விருப்பம்
03. சர்ப்பத்தை
04. இரக்கம்
08. மண்
09. தயை

**குறுக்கெழுத்துப் போட்டி 107 இற்கான வெற்றியாளர்**

வெற்றியாளர் இல்லை

**இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான இவ்இதழைத் தொடர்ந்து பெறுவார்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப் போட்டி இல. 109,**
**"வாலிபன்"**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

**குறுக்கெழுத்துப் போட்டி 109 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**

**15.01.2017**

## சித்திரப் போட்டி இல-09

### வெற்றியாளர்

செல்வி.சு.லீடியா அபிகாயில்
இல:80, வாவிக்கரை வீதி-02,
மட்டக்களப்பு.

வெற்றியாளரினால் நிறந்தீட்டி அனுப்பப்பட்ட சித்திரம் எமது சஞ்சிகையின் பின்புற அட்டையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களின் ஞாபகத்திற்கு

1) கேபா என அழைக்கப்படுபவன் யார்?
2) யார் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்?
3) என் மகனே நீ உன் செவியை ........................ சாய்த்து உன் இருதயத்தை........ அமையப்பண்ணும் பொருட்டு
4) யார் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்?
5) கர்த்தர் யாரை ரட்சிக்கிறார்?


### விடைகள்

1) பேதுரு
2) மூடர்கள்
3) ஞானத்திற்கு, புத்திக்கு
4) கர்த்தர்
5) கர்த்தர் அன்புகூருவரிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.: 110

உருவாக்கம் : N.கோபிகா



### இடமிருந்து வலம்

1. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான ...... போலிருந்தது.
3. காணாமற்போன ஆடுகளாகிய .......... வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேயன்றி மற்றப்படியல்ல என்றார்
4. நீ தேவனுக்கு ஒரு....... பண்ணிக் கொண்டால் அதை செலுத்தத் தாமதியாதே (இடைவெளியில் வர வேண்டியது குழம்பியுள்ளது.
5. இயேசுவின் பாதத்தில் விழுந்து தன் குமாரத்திக்காக வேண்டிக் கொண்ட ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய இவன் திரும்பியுள்ளான்.
7. இவன் எருசலேமுக்கு வந்து சீஷருடனே சேர்த்துக் கொள்ளப் பார்த்தான்.
8. தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு. மிதமிஞ்சிச் சாப்பிட்டால் .......... பண்ணுவாய்.

### மேலிந்து கீழ்

1. மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் ........ பிரகாசித்தது.
2. யாக்கோபு, தன் சகோதரனுடைய முகத்துக்கு தப்பி ஓடினபோது, அங்கே தேவன் தனக்கு தரிசனமானபடியினால் அந்த ஸ்தலத்துக்கு இவ்வாறு பெயரிட்டான்.
3. சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள ...... உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.
6. இவனுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.
7. மூடன் தன் கைகளைக் கட்டிக் கொண்டு இதனையே தின்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிதாவின் வார்த்தை

*ஏசாயா 7 : 10 - 16*

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப் படியாமல் போன ஆதாம் ஏதேன் தோட்ட த்திலிருந்து வெளியேற்றப்பட்டான். வெளியேறிய ஆதாம் தேவனிடம் மனம் வருந்தி மன்றாடி மீண்டும் ஏதேனினுள் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டபோது பிதாவானவர் வார்த்தையானவரை அனுப்பி ஆதாமிடம் கூறியது உன்னை மீண்டும் ஏதேனிலே ஏற்றுக்கொள்ள ஒரு குறித்த காலமுண்டு எனக் கூற மீண்டும் ஆதாம் அது எப்போது? என்று வினாவ வார்த்தையானவர் மூலம் 5 1/2 நாட்கள் என பிதாவானவர் பதிலளித்தார் என்று ஆதாமும் ஏவாளும் எழுதிய நிருபம் எனும் தகவல் பதிவிலே வாசிக்கக் கிடைத்தது

நாட்கள் என்பதை எனது சின்ன மூளை இவ்விதம் பகுத்தறிய நேர்ந்தது 2பேதுரு 3:8 இலே குறிப்பிடப்பட்டுள்ளது போல ஆதாம் முதல் தாவீது வரை 5000 வருடங்களுள் தாவீது முதல் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு வரை 500 வருடங்களும் மொத்தமாக 5500 வருடங்கள் 5 1/2 நாட்களாகலாமே ஏசாயா 7:10 -16 இல் ஆகாசினால் அடையாளம் கேட்க முடியாமல் போன போது கர்த்தர் கொடுத்த வார்த்தை ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ...இவ்வார்த்தை பிதாவானவர் எப்படி நிறைவேறச் செய்தார் என்பது எண்ணிப் பார்க்கும் போது ஆச்சரியத்தையூட்டும்.

திருமணமான இசுக்கார் அன்னாள் தம்பதியினர் அநேக காலம் பிள்ளையில்லாதிருந்தாலும் எருசலேம் தேவாலயத்திலே தமது கடமைகளில் தவறாத ஒரு குடும்பம். இவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது போலவே குழந்தை பிறந்தது அக்குழந்தை பெண் குழந்தையாக இருந்தபொதிலும் பால் மறந்தவுடனேயே தேவாலயத்திலே விடப்பட்டால் 12 வயதுவரை பலிபீடத்தில் அப்பங்களை உண்டு வளர்ந்தவள் தான் மரியாள். இவ் வயதின் பின் பெண் என்பதால் தேவாலயத்தில் வளர்க்கப்பட முடியாது என்பதனால் ஆசாரியர் குழாமால் யோசனை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. எருசலே தேவாலயத்தோடு நெருங்கிய உறவுடைய தபுதாரர்களின் பெயர்கள் சீட்டுப் போடப்பட்டபோது அதிலே பிள்ளைகளுடன் தபுதாரரான யோசேப்பின் பெயர் தெரிவு செய்யப்பட்டது.

வயது சென்ற யோசேப்போ மரியாளை ஏற்றுக்கொள்ள தயங்கியதுடன்

தொடர்ச்சி பக்கம் 16இல்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டத்தில் 10 ஆண்டுகள்

### 2007 மார்கழி
கிறிஸ்மஸ் தினத்தன்று வாலிபனின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.

### 2009 புரட்டாதி
SMS ஜெப ஊழியம் ஆரம்பம்

### 2009
"உன்னுடைய இடத்தில் நான்" துண்டுப்பிரசுரம் வெளியீடு

### 2010 வைகாசி
வார்த்தையின் ஊழியம் செய்தி இறுவெட்டாக வெளியீடு

### 2010 மார்கழி
பரந்தனை நோக்கிய பயணம் மற்றும் வன்னி ஊழியம் ஆரம்பம்

### 2010 மார்கழி
வாலிபனின் 3ம் வருட நிறைவையொட்டி மாபெரும் புத்தக கண்காட்சி மற்றும் கிறிஸ்துவுக்காய் பாடுவேன் நிகழ்வுகள் நடைபெற்றது

### 2010 மார்கழி
வன்னியில் சிறுவர்களுக்கு 10000 அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

### 2011 ஆனி
வாலிபன் ஊழியத்துக்கான ஒலிபெருக்கி சாதனம் கொள்வனவு செய்யப்பட்டது.

### 2011 கார்த்திகை
மார்கழி வாலிபனின் 100நாள் வேலைத்திட்டம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஆரம்பம்

### 2011 மார்கழி
"கிறிஸ்துவுக்காய் பாடுவேன்-2" நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 2012 சித்திரை
"இயேசுவின் முகத்தைத் தேடி" நற்செய்தி கூட்டம் களுதாவளை தொடக்கம் கோமாரி வரை நடாத்தப்பட்டது.

## 2012 மார்கழி
வாலிபனின் இணையத்தள ஊழியம் ஆரம்பம்

## 2012 மார்கழி
களுவங்கேணி கும்புறுமூலை கல்மடு மற்றும் கிரான் பிரதேசங்களில் வீதியோர நற்செய்திக் கூட்டமும் துண்டுப்பிரசுர விநியோகமும் நடைபெற்றது

## 2013 தை
பாட்டாளிபுர ஊழியம் ஆரம்பம்

## 2013 மாசி
பாட்டாளிபுரத்தில் இலவச மருத்துவ முகாம்

## 2013 சித்திரை
வாலிபனின் 65வது இதழ் வர்ணப் பிரதியாக வெளியீடு

## 2013 புரட்டாதி
மூதூர் கல்லடியில் விடுமுறை வேதாகமப் பாடசாலை நடாத்தப்பட்டது.

## 2014 மாசி
மண்டூர் மிஷனில் "கிறிஸ்துவுக்காய் வாழ்வேன்" ஒருநாள் வாலிபர் பாசறை நடாத்தப்பட்டது.

## 2014 சித்திரை
கல்லாறு சேகர சிறுவர்களுக்கான ஒருநாள் விடுமுறை வேதாகமப் பாடசாலை நடைபெற்றது

## 2014 புரட்டாதி
வாலிபர்களுக்கான கிரிகட் சுற்றுப்போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது

## 2016 வைகாசி
வாலிபனின் 100வது இதழ் வெளியீடு

## 2017 மார்கழி
வாலிபனின் 10 வருட நிறைவையொட்டி இரத்ததான முகாம் நடாத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிருபையின் நாட்கள்

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா"

(சங்கீதம் 127:01)

**ஆ**ண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனியநல் நாமத்தினாலே உங்கள் ஒவ்வொருவரையும் வாலிபன் குடும்பத்தினராக வாழ்த்துகின்றோம்.

2007.12.09ம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலிபன் ஊழியமானது இன்று தனது 10ம் அகவை நிறைவு செய்ய கிருபை அளித்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம்.

"நால்வரினுள் விதைக்கப்பட்ட
விதையானது - இன்று
நிழல் தரும் மாவிருட்சமாய்
கனிதரும் செடியாய்
கர்த்தருக்கென வேரூன்றிற்று"

'வாலிபன் சஞ்சிகை" என்ற வார்த்தையின் ஊழியமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலிபன் ஊழியமானது, இன்று தனது 112 ஆவது இதழை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதில் குறுக்கெழுத்துப்போட்டி, சிறுவர் பகுதி, சிந்தனைத் துளிகள், சிந்திக்க வேண்டிய உலக விடயங்கள், மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளின் புகைப்படங்காளன பல்வகையான விடயங்களைச் சுமந்து வர கர்த்தர் கிருபை கொடுத்தார். (சங் 119:130) என்ற வார்த்தைக்கு அமைய பேதைகளை உணர்வுள்ளவர்களாக்குவதற்காக 'உன்னுடைய இடத்தில் நான்" என்ற தலைப்பில் துண்டு பிரசுரம் அச்சிடப்பட்டு சுமார் 20,000 இற்கும் மேற்பட்ட கர்த்தரை அறியாத மக்களின் கரங்களைச் சென்றடைந்து மாற்றங்களை உருவாக்கியது.

வாலிபன் ஊழியங்களின் 5ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இணையத்தள (website) ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கையில் மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் இவ் ஊழியம் எடுத்துச் செல்லப்பட்டது.

அத்துடன் விசேடமாக கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் தேவைகளோடு கூட வாழ்ந்து வந்த மக்களுக்கு உடைகள், பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் நத்தார் பரிசில்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ச்சி 16இல்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்தப் பெண்



"அடிகான உங்கள் முகங்கள் கோபத்தால் நிறைந்தால்......
அது உங்களாலே வெறுக்கப்படும்."

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கிராமத்தில் வசித்த முத்தையா என்பவர் தன்னுடைய வயலுக்கு அருகாமையில் ஒரு முகம்பார்க்கும் கண்ணாடி கீழே கிடந்ததை கண்டு அதை எடுத்து பார்த்தார். இதுவரையும் அவர் இதை பார்த்திராததினால் தன்னுடைய முகம் தான் பிரதிபலிக்கிறது என்று தெரியாமல் யார் இவராக இருக்கக்கூடும் என்ற கேள்வி மீண்டும் மீண்டும் அவர் உள்ளத்தில் பிரதிபலித்தது.

இந்த விசித்திரமான பொருளை தன்னுடைய மனைவியினிடத்தில் காட்டலாமே என்று வேட்டியில் கட்டிச் சென்றார். வேலைபார்த்த களைப்பில் திண்ணையில் கண்ணயர்ந்து தூங்கி விட்டார்.

வீட்டம்மாவுக்கு வெத்தலை போடுற பழக்கம் உண்டு. அன்று, வெத்தலை மெல்லுவதற்காக பொட்டலத்தை எடுத்து பார்க்கும் போது அங்கே சுண்ணாம்பு இல்லை உடனே தனது வீட்டுக்காரரின் வேட்டியில் உள்ள வெத்தலை பையை திறந்து பார்த்ததும் அங்கே ஒரு அதிர்ச்சி இவரும் இதுவரை பார்த்திராத அந்த முகம்பார்க்கும் கண்ணாடி. அதில் தன்னுடைய முகம் தான் தெரிகிறது என்று தெரியாமல்

'அடியே யார் இந்த பெண்! இவளை தன்னுடைய வேட்டியில் இவர் கட்டி வைத்திருக்கிறார். ஏதோ தப்பான உறவு இந்த மனுஷனுக்கு இருக்கிறது என்று சிந்திக்கும் வேளையில் கோபம் தலைக்கு ஏறியது. அந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக வெறுப்பாக, வெறியாக கொலையாக மாறியது.

அம்மிக்கல்லால் அவர் தலையை பதம் பார்த்தாள். முடிந்தது கதை காவலர் வந்த பிற்பாடுதான் இது கண்ணாடி இது தன்னையே பிரதிபலிக்கும் சாதனம் என்று கண்டு உள்ளம் உடைந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூடனுடைய கோபம் சீக்கிரத்தில் வெளிப்படும் இலச்சையை மூடுகிறவனோ விவேகி" (நீதி 12:16)

"அருமையானவர்களே! மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே" (யாக் 1:20)

பலர் கோபம் என்பது எங்களுடைய குணம் என்பர் மனிதனுக்குள் எல்லா குணங்களும் வளரும் தன்மையைப் பெற்றது. அதைப்போல இந்த கோபமோ வளர்ந்து அதன் நிலைகள் - பகையாகவும், வெறுப்பாகவும், வளர்ந்து கொலை வெறியாக உருவெடுக்கிறது. ஆகவே தான் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது.

'உக்கிரம் கொடுமையுள்ளது கோபம் நிஷ்டூரமுள்ளது பொறாமையோ வென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்? நீதி 27:4, உங்களுக்கு கோபம் ஒரு குணமாக இருக்குமானால் அது நல்ல உறவுகளை மண்ணுக்குள் புதைத்துவிடும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களுடைய வாழ்வில் வருவாரேயானால் தேவ அன்பை உள்ளத்தில் ஊற்றிவிடுவார் கோபத்தில் வேண்டாம் என்று ஒதுக்கி வைத்த குடும்பங்களை இணையச் செய்வார். சமாதானமும் சந்தோஷமும் உங்கள் குடும்பங்களை ஆளும் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

- K. ஜான்சி -

## கிருபையின் நாட்கள் தொடர்ச்சி....

பின்தங்கிய சிறார்கள் மற்றும் வாலிபர்களுடன் இணைந்து VBS நிகழ்வு, விளையாட்டுப் போட்டிகள் (கிரிக்கட்), ஆலய ஆராதனைகள், ஜெப ஒன்று கூடல்கள், திறமைகளை வெளிக்காட்டும் பாடல் போட்டிகள், கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்வுகளினூடாக அன்பு கட்டியெழுப்பப்பட்டது. அதிவிசேடமாக மருந்துவமுகாம் பாட்டாளிபுர பகுதியிலும், இரத்ததான நிகழ்வு மட்டக்களப்பு பகுதியிலும் ஒழுங்கு செய்யப்பட்டு பிறர் பயனடையத்தக்க விதமாய் இடம்பெற்றது.

இதுவரை காலமும் இவ்வாலிபன் ஊழியங்களைக் கர்த்தருடைய நாம மகிமைக்கு ஏதுவாக நடாத்த உதவி செய்த கர்த்தருக்கும், உங்கள் ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றிகள். இதுபோல தொடர்ந்தும் உங்கள் பங்களிப்பினை செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக (2 தெசலோ 3:16)

## பிதாவின் வார்த்தை தொடர்ச்சி....

பிள்ளைகளுடைய பாதுகாப்பில் மரியாளை விட்டு வெளியூர் சென்றார் வேலை செய்ய.

16 வயதை மரியாள் அடைந்த போதே காபிரியேல் தூதன் சந்தித்து சங்கதியை சொன்னார். எனும் காரியங்களும் வாசித்து அறிக்கிடைத்தது. மரியாள் கடைசியாக கன்னியென்தை வாசித்து அறிந்தபோது புல்லரித்துப் போனது. பிதாவின் வார்த்தைகள் எவ்வளவு உண்மைத்தன்மை உடையது என்பது புலப்படுகிறதல்லவா....!


சங்கீதக்காரன் எழுதியுள்ளதுபோல, கர்த்தர் அவருடைய பெயரைப் பார்க்கிலும் வார்த்தையை மகிமைப்படுத்துபவராக இருக்கின்றாரல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரப் போட்டி இல - 11

இந்த சித்திரத்தை நன்றாகக் கவனித்து, பொருத்தமான வர்ணம் தீட்டி, இதனுடன் தொடர்புடைய ஏதாவது ஒரு வேத வசனத்தை சரியான வேதாகமப்பகுதியுடன் குறிப்பிட்டு எமக்கு அனுப்பி அழகிய பரிசு ஒன்றை வெல்லுங்கள்!



## போட்டி பற்றிய நிபந்தனைகள்

நீங்கள் 10 வயதிற்குட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்.
உங்களது ஞாயிறு பாடசாலை அதிபர்/ ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாக எழுதபபட்டிருத்தல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய கடைசித்திகதி :**

**15.01.2018**

## அனுப்பவேண்டிய முகவரி

ஆசியர்
"வாலிபன் ஊழியங்கள்"
இல:92,
கோட்டைமுனை
மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஜீவந்தி அக்கா -

# சிறுவர் பகுதி

## சிறுவர்கள் ?

ஒரு ஊரில் ஜ்ட் என்ற ஒரு சிறுவன் தரம் 07லில் கல்விக் கற்றுக்கொண்டிருந்தான். தனது வகுப்பில் உள்ள மாணவர்களில் யாரையாவது புண்படுத்தி அவர்களை ஏளனம் செய்து அவர்களது மனதை காயப்படுத்துவதே ஜீட்டின் வழக்கமாக இருந்தது. ஜட்டை கண்டாலே அவனது வகுப்பில் எல்லோருக்கும் பயம்.

ஜட் வகுப்பில் உள்ளவர்களை மட்டுமல்லாது வீதியில் பிச்சைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களை கல்லினால் அடித்து துன்புறுத்துவான். அவர்களது உணவில் மண்ணை அள்ளி போடுவான் ஜட்டிடம் அவனது அம்மா பலமுறை அவனுக்கு இப்படி செய்யாதே என்று கூறியும் அவன் கேட்கவில்லை.

ஒரு நாள் அவனது வகுப்பிற்கு ராமு என்ற ஒரு புது மாணவன் வந்தான். அவன் ஜட்டைப் போல் வசதியற்றவனாய் இருந்தான் ஜட், ராமுவிற்கும் தனது தொந்தரவுகளை கொடுக்கத் தொடங்கினான் அவனது புத்தகங்களை கிழித்து எறிந்தான். அவனது உணவை கீழே கொட்டினான். பல தொந்தரவுகளை கொடுத்து ராமுவை மன வேதனைக்குட்படுத்தினான். ஆனால் ஜட் தனது சேட்டையை குறைக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமையன்று ஜட் ஆலயத்திற்கு சென்று ஞாயிறுபாடசாலையில் கலந்து கொண்டான். அன்று ஆசிரியர் அவனுக்கு மத்தேயு 26:45 இல் உள்ள வசனத்தை சொல்லிக் கொடுத்தார். நாம் சிறியவர்களான ஏழை எளியவர்கள், கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு நாங்கள் எதைச் செய்கிறோமோ அதை இயேசப் பாவிற்கு செய்வது போல் என்று விளங்கப் படுத்தினார். ஜட்டிற்கு அவன் செய்த தவறு அப்போது தான் விளங்கினது. ஜட் இயேசப்பாவிடம் மன்னிப்பு கேட்டு தன் தவறை உணர்ந்து, அன்றிலிருந்து மற்றவர்களை அன்பு செலுத்த ஆரம்பித்தான்.

என் அன்பு தம்பி தங்கைகளே! மத்தேயு 26-45 வரையான பகுதியில் இயேசப்பா தன்னுடன் யாரை சேர்த் துக் கொள்வார் என்று அழகாக குறிப்பிடப் பட்டுள்ளது.


நாம் என்ன செய்யப் போகிறோம்? இயேசப்பாவிற்கு விரும்பிய பிள்ளைகளாக இருக்கப் போகின்றோமோ அல்லது இயேசப்பா வெறுக்கும் பிள்ளையாக இருக்கப் போகின்றோமா? சிந்திப்போம் செயல்படுவோம்.

"மிகவும் சிறியவர்களாகிய இவர்களில்
ஒருவனுக்கு நீங்கள் எதைச்
செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே
செய்யாதிருந்தீர்கள்" (மத்தேயு 26:45)

அன்புள்ள இயேசப்பா, நான் மற்றவர்களுக்கு உதவி செய்யாமல் அவர்களை கஷ்டப்படுத்தினதிற்கு என்னை மன்னியுங்கள். நீங்கள் விரும்பும் பிள்ளையாக வாழ உதவி செய்யுங்கள். ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த தான முகாம்




வாலிபன் ஊழியங்களின் 10ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக கடந்த 03.12.2017 அன்று இரத்த தான் முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு. ஏறத்தாழ 50 கொடையாளிகள் இரத்த தானம் செய்து இன்னுமொரு உயிரைக் காக்க முன்வந்தார்கள். இவ்வூழியத்தை ஜெபத்தில் தாங்கியவர்களுக்கும், இரத்தம் தானம் செய்த நல் உள்ளங்களுக்கும் வாலிபன் ஊழியங்களின் நன்றிகள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர்புகளுக்கும் ஜெபத் தேவைகளுக்கும் ஆசிரியர், 'வாலிபன்' சஞ்சிகை, மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை. 077 233 5106, 077 958 4930, 077 771 6847 E-mail: vaalipanky@gmail.com | Web : www.vaalipan.com | Facebook : vaalipan | Twitter : vaalipan_ky/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org